Registered as a News Paper in Ceylon

P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஷ (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுஅ] பாற்ப்பாணம்:- ஏவிளம்பி ஆனி மீ உக உ வெள்ளிக்கிழமை (5 JULY. 1957) [இல-கரு]

# தமிழிற் பேசுங்கள் எழுதுங்கள் தமிழ் வளர்க்க

## கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் குறிக்கும் வழி

"எம் உயிரினும் மேலான தமிழ் மொழிக்குப் பேரிடர் வந்துள்ள இந்நேரத்திலே தமிழ்மொழியை எவ்வாறு வாழச் செய்யலாம், எப்படி வளம்படுத்தலாம் என்பனவற்றை இலங்கையிலுள்ள தமிழ்மக்கள் யாவரும் அறியவும், அறிந்து உகந்த வழிவகைகளை மேற்கொள்ளவும் செய்தல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முதற் கடமையாகும். என்று வெள்ளவத்தைச் சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்ற கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் பதினைந்தாவது ஆண்டுக் கூட்டத்தில், அச்சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்கள் கூறினார்கள்.

பண்டிதர் இரத்தினம் மேலும் தொடர்ந்து பேசுகையில் பின்வருமாறு கூறினார். "இன்று நீங்கள் என்னைத் தலைவராகத் தெரிவு செய்ததைத் தமிழ்த்தாய்க்கு நீங்கள் செய்த பெருமதிப்பாகவே கொள்ளுகிறேன். எமது சங்கத்தில் சென்ற சில ஆண்டுகளாக இருந்த பிரிவினைகளும் போட்டிகளும் இந்த ஆண்டில் நீங்கிவிட்டன. எல்லோரும் ஒன்றுபட்டுத் தமிழ் வளர்க்க முன்வந்திருப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இது தமிழன்னை முடிசூடுவாள் என்பதற்கு அறிகுறியாகும்."

"நான் கடந்த பல வருடங்களாகப் பல முறை தமிழ்ப்பெருமக்களை வேண்டிக்கொண்டு வருவதை முதலில் உங்களுக்கு நினைவூட்டுகிறேன். தமிழ் வளர்ககச் சங்கம் எடுத்த பெருமக்களாகிய நீங்கள் இதனைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். பெருந்தியாகமின்றிச் சிரமந்தானுமின்றிக் கடமை யுணர்ச்சியாலுந்தப்பட்டுச் செய்யப்பட வேண்டியது இது. தமிழுக்கு உங்கள் வாழ்வின் துறையனைத்திலும் முதன்மை கொடுங்கள். நீங்கள் எழுதுவன பேசுவன பாடுவன யாவற்றையும் தமிழிலே செய்யுங்கள். அரசாங்கத்துக்கும் வியாபார நிலையங்களும் பிறவற்றுக்கும் எழுதுவன யாவற்றையும் தமிழிலே எழுதுங்கள். தமிழிலே வருமானவரிப் பத்திரங்கள் முதலியவற்றை நிரப்புதற்கு முடியாமல் இடர்படுகிறவர்களுக்கு எமது தமிழ்ச்சங்கம் வேண்டிய உதவிகளைச் செய்யும்."

"எமது சங்கத்தின் இல்லத்தில் அடுத்த மாதத்தில் நூல் நிலையம் அமைக்கப்படும். கிழமைதோறும் இலக்கியவகுப்புக்கள், கலந்துரையாடல்கள், சொற்பொழிவுகள், ஆராய்ச்சிகள் முதலியனவற்றை நடத்தவும் ஆண்டுமலர் ஒன்றினை வெளியிடவும் திட்டங்களை வகுப்போம்.

அகில இலங்கைப் பேச்சுப் போட்டி கட்டுரைப் போட்டி முதலியனவும் நடத்தப்படும்.

சென்ற ஏழெட்டு நூற்றாண்டுகளாக நம் ஈழநாட்டிலே தோன்றிய புலவர் பெருமக்கள் இயற்றிய நூல்கள் பலவாகும். இவைகள் யாவற்றையும் சேர்த்து வைக்கவும் நம் சங்கம் உடனே முயலுதல் வேண்டும். சங்க இல்லத்தில் பெரியதொரு மணிமண்டபம் அமைத்தற்குப்பணம் திரட்டவும் இனித்தொடங்குவோம்.

இப்பணிகளுக்கும் இவை போன்ற பிறவற்றிற்கும் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள்மாத்திரமன்றித் தமிழ்ப் பெருமக்கள் யாவருமே தங்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

அரசியல் அலை

# நெற்காணிச் சட்டத்தால் நெருக்கடியா?

## ஆளுங் கட்சியினருக் கிடையில் அபிப்பிராயபேதம்!

## மந்திரிமாரை வற்புறுத்தி மாற்றங் கேட்டல் முடியாதாம்!

ம. ஐ. முன்னணி அரசாங்கம் இதுவரையிற் கொண்டுவந்த புதுச் சட்டங்களில் முதல் முதலாக எழுந்த தனிச் சிங்களச் சட்டம் நாட்டைக் குழப்பத்தில் வீழ்த்திவிட்டது என்பது யாவருமறிவர். இப்பொழுது உணவு உற்பத்தி மந்திரியார் கொண்டுவர ஒழுங்கு செய்யப்படும் நெற்காணிச் சட்டமும் சமுகப் புரட்சியை எழுப்பிவிடுமா என்று பலர் எண்ணுகின்றார்கள்.

ஆட்சியாளருக்கிடையிலேயே அபிப்பிராயம் வேறுபட்டிருப்பதாக எண்ண இடமிருக்கின்றது. காணி பூமி பரம்பரையாகவுள்ளவர்களும் தங்கள் தேட்டத்தினுற் பெற்றவர்களும் நெல் விளைவிக்கும் விவசாயத் தொழிலில் ஈடுபடுவதென்றாற் சுலபமல்ல ஆகவே பயிரிடுவோர் காலகதியிலே தாம் குத்தகைக் கெடுத்த நிலங்களைச் சொந்தமாக்கிக்கொள்ளும் உரிமையைப்பெற நிலத்தை உடையவர்கள் நீக்கப்படுவார்கள் என்ற இதுபோன்ற பலசமுக அடிப்படையான மாற்றங்கள் வரும் என்று காணி பூமி உள்ளவர்கள் கருதுகின்றார்கள். இந்த வகையிலே அரசாங்கக்கட்சி அங்கத்தவர்கள் பலா உளர். எனவே இந்தச் சட்டம் கட்சியிற் பிளவை உண்டுபண்ணும் என்றே பொதுவாகப் பேசப்படுகின்றது.

இந்தச் சட்டத்தை ஏணியாகக்கொண்டு ஆட்சி பீடத்தில் அமர்ந்துவிட மந்திரியார் பிலிப்பு குணவர்த்தன முயன்று வருகின்றார் என்றும் சொல்லப்படுகின்றது. அப்படியானுற் பிரதமர் 'நியாயமான அளவு நெற்காணிச் சட்டப் பிரயோகம்' என்ற ஒரு புதுச் சட்டத்தைக் கொண்டு வந்து நிலைமையைச் சமன் செய்யத் துணிவார் எனறு கருதப்படுகிறது.

### வேலை மாற்றத்துக்கு வேண்டுகோள்

மந்திரி தகநாயகவும் மந்திரி விசயவர்த்தனவும் வேலைமாற்ற வேண்டுகோட்களினுற்படும் அல்லல் சிறிதல்ல. உண்ணுவிரதம் வேலைநிறுத்தம் என்று ஒருசாரார், பதவியை விட்டு விலகுவோம் என்று பயமுறுத்தும் இன்னுெருசாரார். இன்னும் ஒரு சாரார் புத்த 'குருமாரை அழைத்துச் சென்று மத வற்புறுத்தல் செய்கின்றனர். இது முக்கியமாகச் சுகாதார மந்திரியாரிடமே காண்பிக்கப்படுகின்றது. இவற்றையெல்லாம் கண்டு மனம்மாறி மாற்றங்களை மாற்றமாட்டோம் என்று முடிவு செய்துவிட்டார்களாம் இம்மந்திரிமார்.

# உதவி பெறும் பாடசாலைகள்

## அரசாங்கத்திடம் கொடுப்பது சரியா பிழையா?

உதவிப் பாடசாலைகளை அரசினர் எடுத்து நடத்த வேண்டுமென்னும் ஆலோசனைக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் பல கட்டுரைகள் கடிதங்கள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. இது விஷயத்தில் கல்வி மந்திரியும் அதிக சிரத்தை கொண்டுள்ளார்.

கிராமங்களில் உதவிப் பாடசாலைகள், சில செல்வாக்குடைய பிரபுக்களால் தங்கள் சொந்த நிலங்களில் தங்கள் சொந்தப் பணத்தில் கட்டப்பட்டு அவர்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

வேறு சில உதவிப் பாடசாலைகள் கிராமங்களிலுள்ளவர்களின் நிலங்களில் அக்கிராம வாசிகளிடம் சேர்க்கப்பட்ட பணத்தில் கட்டப்பட்டு அவ்வூர் வாசிகளால் ஓர் நிர்வாக சபை மூலம் (Board of Management) நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. கால கதியில் அந் நிர்வாகங்கள் தளம்ப, சில செல்வாக்குப்படைத்தவர்கள் நிர்வாகத்தைக் கைப்பற்றி எ[illegible] கார முறையில் [illegible] கட்டப்பட்ட பாடசாலைகளுக்கு யாதும் தொடர்பற்ற முறையில் காத்திராப்பிரகாரமாக முகாமைக்காரர்களாகிவிடுகின்றனர்.

இவ்வுதவிப் பாடசாலைகளை அரசினர் எடுத்து

திரு. P.S. நாதன்

நிர்வகிப்பதால் அவர்களுக்கு அதிக பணநஷ்டம ஏற்படுமென்று கூக்குரல் போடுவது ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுததை ஒக்கும். இக் கூச்சலுக்கு இத்தகைய முகாமைக்காரர்களில் பெரும்பாலாரே பொறுப்பாளிகளென்பது எவருக்கும் விளங்கும்.

இவ்[illegible] பாடசாலைகள் தனிப்பட்டவர்களால் நடத்தப்படுவதால் சில நன்மைகளும் அநேக தீமைகளும் உண்டு.

முதலாவதாக அந்த அந்தக் கிராமங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு அப் பாடசாலைகளிலேயே இடம் பெறுவதற்கு ஓர் விசேட சலுகையுண்டு.

இரண்டாவதாக இப் பாடசாலைகள் பொதுமக்களிடமேயே பணம் சேர்த்து நிர்வகிக்கப்பட்டுவருவதால் அரசினருக்கும் கஷ்டத்தைக் குறைக்கும்.

இவ்வித நன்மைகளை விட சில எதேச்சாதிகாரம் படைத்த முகாமைக்காரர்களால் பாடசாலைகளுக்கு ஏற்படும் தீமைகள் பலவுண்டு இத்தகைய முகாமைக்காரர்கட்குத் தற்போது கல்வி மந்திரி ஒரு முகாமைக்காரருக்கு விடுத்த கட்டளை தகுந்த எச்சரிக்கையாகும். இம் முகாமைக்காரர் பதவியிழந்தது மாத்திரமல்ல அப் பாடசாலை நிர்வாகத்தையும்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஹு ஆனி மீ
உக வ வெள்ளிக்கிழமை


## அடக்கமில்லா அமைச்சர்!

—0—

எப்பொழுதும் எங்கும் ஏதாவது பேசிக்கொண்டிருப்பது அரசியல் வாதிகளுக்கு அழகல்ல. அவ்வாறு செய்தல் அமைச்சர்களுக்கு ஆகாது. தமிழ் பேசும் மக்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் இடையிலே உள்ள அரசியற் சிக்கலை நீக்குவதற்குச் சமரச முறையில் ஆலோசனைகள் செய்யப்படும் இவ்வேளையிலே இருபக்கத்திலும் மௌனம் அத்தியாவசியம் என்ற உண்மையை மறந்து, ஒழுங்குநெறிதவறி அரசியல் வாதிகளும் ஆட்சியாளர்களிற் சிலரும் மனம்போனவாறு அடக்கமில்லாத வெற்று மொழிகளைப் பிதற்றி விபரீத நிலைமையை யுண்டுபண்ணுவது கண்டிக்கப்படவேண்டியதாகும். ஒருவரின் தீய சொற்களால் எழுகின்ற தீமை சிறிதெனினும் ஏனையோரின் முயற்சியினல் உண்டாகக்கூடிய நன்மையைப் பயன்படாதொழியச் செய்யும் வன்மையுடையது என்பதைக் கற்றடங்காத அமைச்சர்களுக்கு எடுத்துக் காட்டுவது எங்கள் கடமையாகும்.

மந்திரியார் மரிக்காரின் மந்திரமொழிகள் எத்துணைத்தீமைகள் விளைவிக்கக் கூடியன என்பதை அன்னருக்கு ஏனைய அமைச்சர்கள் ஏன் விளக்கி இடித்துரைக்கவில்லையோ யாமறியோம். அறன் அறிந்து ஆன்றமைந்த சொல்லானே அமைச்சன் ஆவான். அத்தகைய ஆற்றலில்லாதவர்கள் அமைச்சு நடத்தும் அரும்பணியில் ஈடுபட்டிருந்தால் தங்கள் சொற்களின் கண் சோர்வு இல்லாது காத்தோம்புதற்குப் பழகுதல் வேண்டும். இல்லையேல் அத்தகைய அமைச்சர்கள் ஆட்சியாளர்களுக்குப் பொல்லாப் பகைஞர்களாகவே தோற்றுவார்கள் என்று அரசுமுறை அறங்கூறுங்கால் வள்ளுவனார்,

"பழுதெண்ணும் மந்திரியின்
பக்கத்துட் டெவ்வோர்
எழுபது கோடியுறும்"

என்று அறிவுறுத்தியிருக்கின்றார். காக்கும் கடமையுடைய அமைச்சன் கடுஞ்சொல்லனுகின் நாடு கெடுறுமென்பதுண்மை.

நேயர்கள் நெஞ்சம்

# திரு. வீரசிங்கத்தின் விளக்கத்துக்கு மறுப்பு

—:O:—

ஐயா!

நான் தங்களிடம் 16-4-57ல் கேட்ட சில விளக்கங்கட்கு 18-6-57ல் பதில் தந்துள்ளீர்கள். அவற்றில் எனக்கு ஏற்பட்ட சில சந்தேகங்களை தங்கட்குச் சமர்ப்பிக்கிறேன்.

(1) நான் கேட்ட விளக்கங்கள் தாங்கள் கடைப்பிடித்து நிற்கும் பிடிவாதத்திற்கு மாறுபட்டனவாயிருப்பதற்கு நாமென்ன செய்வது மேலும் தாங்களே வரையறுத்துக் கூற முடியாமல் 'கூடிய அளவு' பொருந்தக் கூடிய நியாயம் காட்டலாம் எனக் கூறியிருப்பதிலிருந்தே சரியான நியாயம் ஒன்றுணடென்பது வெள்ளிடைமலை.

(2) தாங்கள் ஒருவருடத்திற்கு முன்னரே சிங்கள அரசமொழித் திட்டம் நிறைவேறினல் தமிழுக்கு சமத்துவம் திரும்ப ஒருபோதும் வராது என்று கூறியது தங்கள் திட்டங்களில் ஒன்று எனக் கூறுகிறீர்கள். தமிழ் மொழிக்குச் சமத்துவம் வந்த பொழுதும், சமத்துவம் உள்ள காலத்தில் தமிழுரைச் சிங்கள ஆட்சியாளர் பாரபட்சமாக நடத்தினர்கள் என்பதையும் ஒத்துக் கொள்கிறீர்கள். தாங்கள் அரசசபையில் இருந்தகாலத்தில் தமிழுக்குச் சமத்துவம் இருந்ததெனவும் கூறுகிறீர்கள். இது என்ன விசித்திரம் ஐயா! சமவசதி உரிமையைப் பலப்படுத்த வேண்டுமெனவும் கேட்கிறீர்கள். தாங்கள் பத்திரிகையில் எழுதியதும் தந்துவிடுவார்கள் என எண்ணுகிறீர்கள். தமிழ்ப் பிரதிநிதிகளின் விழிப்பின்மையால் இலங்கை அரசியற்றிட்டத்திலிருந்த உரித்து ஆட்சி பண்ணப்படவில்லை எனவும் உரித்து இருக்கிறதென்பதையும் மறந்து தமிழுக்குச் சமத்துவம் கேட்டதால் உள்ளதும் கெட்டது எனவும் எழுதுகிறீர்கள். ஐயா! தாங்கள் பாராளுமன்ற உறுப்பினராயிருந்த காலத்தில் எமது உரித்தை ஏன் ஆட்சிபண்ணமலிருந்தீர்கள். தாங்களே விளிப்பாயிருக்கவில்லை என்பதுதான் அர்த்தம். மேலும் தங்கள் காலத்திற்முன் முதன் முதலாக நான் அறிந்தவரையில் அதிபர். திரு. கன்டி பேரின்பநாயகம் அவர்கள் அன்றைய முதலமைச்சர் கொத்தலாவலையிடம் சமத்துவத்திற்காகச் சட்டத்தைத் திருத்தும்படி வேண்டினர். அப்பொழுது தாங்கள் முயற்சித்து எமது உரித்தை ஆட்சி பண்ணி சமத்துவக் கோரிக்கையை நீக்கியிருக்கலாமே?

(3) எனது கேள்விக்கு, எதுவும்செய்யாமல் மற்றவர்கள் செய்யட்டும என எண்ணித்தான் செய்தித்தாளில் எழுதுகிறீர்களா? அன்றேல் அதுதான் தங்கள் கொள்கையா? மேலும் தாங்கள் மற்றோரிடம் சென்று வழக்குத் தொடருப்படி கேட்பதல்லாது தாங்கள் தொடரும் நோக்கமில்லையா? எதுவும் மற்றையோர் பொறுப்பேற்க வேண்டுமெனவா விரும்புகிறீர்கள். காலம் செல்லச் செல்ல சாதித்துவேசமும் கூடக்கூட சட்ட உரித்திலுள்ள பிரிவுகளும் மாறுகின்றனவா. மேலும தாங்களாக சென்றமாதம ௬-ந் திகதி ஒரு பிரபல நியாயவாதியைச் சந்தித்ததாக எழுதுகிறீர்கள், அதையாவது காலம் தாழ்த்தாமல்சென்றல் என்போன்ற தமிழன்பர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவீர்கள். தாங்கள் பிரதமமந்திரியிடம் சமத்துவம் சேட்டதும் அவர் மறுக்க செய்தித்தாளில் எழுதியதும் தங்களளவில் பாராட்டுச்குரியது.

(1) தாங்கள் அரசசபையிலிருந்த காலத்தில் தமிழரிலும் பார்க்கச் சிங்களவருக்குப் பல வசதி கொடுக்க முயன்றிருக்கின்றது என ஏற்றுக்கொள்ளுகிறீர்கள். வைத்தியம், நிலம், தபாற்கந்தோர், பாடிகாவலர் (பொலிஸ்) பகுதிகளில் சில உத்தியோக பதவிகட்கு சிங்களம் மாத்திரம் தெரிந்தவர்களை எடுக்க முயன்றதாகவும் எழுதுகிறீர்கள் அவைகளை ஏதோ சில காலத்திற்குத் தடுத்ததாகக் கூறுகிறீர்களேயன்றி முற்றாக நிறுத்தவில்லை என்பதை ஏற்றுக்கொள்வீர்கள். பாற் பகுதியில் தடுப்பதிலும் தோல்வி கண்டீர்கள் இவற்றிற்காகத்தான் அரசாங்கக் கட்சியில் இருக்கிறீர்களா? நான் கேட்ட கேள்வியைத் திரும்பவும் தங்கள் கவனத்திற் கொண்டுவருகிறேன். "சிங்களம் மட்டும்" சட்டம் தாங்கள் கூறிய அரசியற்றிட்ட 29-ம பிரிவு திருத்தப்படாமலே நிறைவேறியது என்பதே. ஆனபடியால் இப்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

ஆகவே அமைச்சர்களுக்கு மதிநுட்பமும் நூலறிவும் வேண்டும்.

தலைமை அமைச்சர் பண்டாரநாயக அவர்களே பயனில் சொற்பேசும் அரசியல்வாதிகளாற் பழி நிகழ்ந்துவிடும் என்று எச்சரிக்கை செய்திருக்கவும் மந்திரி மரிக்கார் இந்த விதமாக எல்லாரும் எள்ளி நகையாடத் தீப்பயன் விளைவிக்கும் பண்பிலா உரை செய்வதென்றல் அடங்காமையின் ஆணவ முனைப்பன்றிப் பிறிதென்ன?

### நயினதீவு நாகபூஷணி அம்மன்கோயில் தேரின் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணத்திற் பிரசித்தி பெற்று விளங்கும் நயினதீவு நாகபூஷணி அம்பாளுக்குப் புதிதாக அழகுற அமைக்கப் பெற்றதேரின் வெள்ளோட்ட வைபவம் நிகழும் ஏவிளம்பி வருடம் ஆனிமாதம் இருபத்து நான்காம் திகதி 8-7-57 திங்கட்கிழமை பகல் 11 மணியளவில் நடைபெறும்,

### மதுரைத் தமிழ்க் கல்லூரி

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் வித்துவான் தேர்வுக்கு மாணவர்களைப் பயிற்றும் கல்லூரி ஒன்று மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால் மதுரையில் புதன்கிழமையன்று நிறுவப்பெற்றது.

இக்கல்லூரி சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியங்களிற் பயிற்சி அளிப்பதுவே இக் கல்லூரியின் முக்கிய நோக்கம்.

தமிழ்ச் சங்கத்துக்கு இக் கல்லூரி துணையாக இருக்கும் என்று கல்லூரித் திறப்பு விழாவிலே பேரறிஞர் சோமசுந்தரபாரதியார் கூறினர்.

தமிழ்மொழி வளர்ச்சிக்காக இக்கல்லூரி உழைக்கும் என்று தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. P. T. இராஜன் அவர்கள் வாழ்த்துரை பகன்றார்.

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 7—7—57 —— 13—7—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கு ஞாயிற்றுக்கிழமை உகந்தது. திங்களும் செவ்வாயும் தொல்லை விளைவிக்கும். இரகசிய எதிரிகள் மூலம் குடும்பத் தொல்லைகளும் வில்லங்கங்களும் எழக்கூடும். ஏனைய நாட்கள் நன்மையாகவிருக்கும்,

**இடபராசி** கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

வியாபார அலுவல்களுக்கு வாரத்தின் முற்பகுதி ஏற்றதாயிருக்கும். புதன் வியாழன் வெள்ளி காலை வில்லங்கங்களை விளைவிக்கக்கூடும், வார இறுதி மறுபடி நன்மை பயக்கும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

நல்ல வாரம். பணநிலை சீரடையும். எனினும் மனச்சமாதானம் இராது. மறைமுகமான பகைவர்களால் அடிக்கடி தொல்லைகள் ஏற்பட்டாலும் அப்பகைவர்கள் வெற்றியடையமாட்டார்கள். வார இறுதி இரண்டு நாட்களையும் கவனமாகக் கழிக்கவும்

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

இவ்வாரத்தில் [illegible]
[illegible] மும் நல்லாய் இருக்கமாட்டாது. சுற்றத்தார் சிலருடன் திருப்தியீனப்படவேண்டி நேரிடக்கூடும். நண்பர்களும் அதிக உதவியாயிருக்கமாட்டார்கள்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

இவ்வாரம் நன்மையானது புது வேலைகளை ஆரம்பிக்கும்பொழுது எதிர்ப்பிருந்தாலும் ஈற்றில் அநுகூலம் நிச்சயம். இனத்தவர்கள் தொந்தரவு உண்டுபண்ணுவார்கள்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

சொந்த அலுவல்கள் சீராக வரும். சகோதரர் மிகவும் உதவியாயிருப்பார்கள் உத்தியோக வழியில் உகந்த வாரமென்றாலும் பண இலாபங்களுக்கு இடமில்லை.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தளப்பமான வாரம். தடைகளை நீக்கி முன்னேறுவது கஷ்டமாயிருக்கும், வசையும் தப்பபிப்பிராயங்களும் மனத்தளப்பத்தைக் கொடுக்கும். புது அலுவல்களிற் புகுதல்கூடாது.

**விருட்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

நண்பர்கள் நல்ல உதவியாயிருப்பார்கள். எனினும் முயற்சிகளிலே அதிகம் எதிர்ப்பு எழுந்தபடியிருக்கும், பணநிலை நல்லாயிருக்கும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

வழமையிலும்பார்க்க வேலைகடினமாயிருக்கும், பணநிலை மிகவும் திருப்திகரமாயிருக்கமாட்டாது. எதிர்பாராத செலவு ஏற்படும்.

**மகராராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

வசை சொல்வோரைப்பற்றி எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். கண்டனத்தை தவிர்ப்பது முடியாமலிருக்கும். புது முயற்சிகள் நற்பலனளிக்கும். ஆனல் ஆரம்பத்திற் சில வில்லங்கங்கள் ஏற்படும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

உத்தியோக முறையில் உகந்த வாரம். பணநிலையிலும் அதிக திருத்தங் காணப்படும், எதிர்ப்பு மெல்ல அற்றுப் போகும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

நன்மையானவாரம். எதிர்ப்பை இலேசாகத் தவிர்க்க முடியும். சுற்றத்தவர்களுடன் தொல்லைகளையும் வசைகளையும் வார இறுதியில் தவிர்த்து நடத்தவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இசையின் மேன்மை

## புனிதத் தன்மையைப் பாதுகாக்கும் கடன்

தென்மராட்சி இசைக் கலை மன்றச் சார்பில் சாவகச்சேரி வாரிவனநாத சிவன்கோயிலில் ஞாயிற்றுக்கிழமை 23-6-57 ல் சிறந்த வீணை இசை விருந்தொன்று சென்னை சங்கீத வித்துவான் ஸ்ரீ அரங்க ராமானுஜ ஐயங்கார் அவர்களாலும் அவருடைய புதல்வி செல்வி பத்மாவாலும் அளிக்கப்பெற்றது.

அத்தருணம் இந்திய இசைபற்றி வித்துவான் அவர்கள் ஓர் சொற்பொழிவாற்றினர். அவர் பேசும்போது உலக இசை முறைகளில் இந்திய முறை மிகப் பிரதானமானது. பிறநாட்டு இசை முறைகள் யாவும் இந்திய இசையினின்றும் பிறந்தனவே. இது சரித்திரம் கூறும் உண்மை. தற்காலம் ஏனைய இசை முறைகட்கும் இந்திய இசை முறைகட்குமுள்ள வேற்றுமைகள் பல. அவற்றுள் முதன்மையானது இந்திய இசை இறை வழிபாட்டுக்கு மாத்திரமே பயன் படுத்தப்பட்டு வந்திருக்கின்றது என்பதாகும். நவீன சாத்திரங்களினல் இசையின் புனிதத் தன்மை பாதிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் குறைபாட்டை நீக்குவது மதிப்பிடற்கரிய பண்பாடு செறிந்த தெய்வீகக் கலையைக் காப்பதில் நோக்கமுள்ளவர்கள் மேற்கொள்ளவேண்டிய முக்கிய கடமையாகும். தமிழ்நாட்டைக் காட்டிலும் ஈழநாட்டில் இசையின்மீது இருக்கும் ஆர்வமும் அதன் வளர்ச்சிக்காவன செய்வதில் பல மடங்கு அதிகம் என்பதைச் சென்ற இருபது வருடமாக நான் அறிந்துள்ளேன். ஆகவே கலையின் எதிர்காலம் வளம் குன்ருது இருக்க இலங்கைத் தமிழரின் சலியாத உழைப்பையும் தியாகத்தையுமே என்போலுள்ளவர்கள் நம்பியிருக்கின்றனர் என்று கூறினர்.

இந்நிகழ்ச்சி திரு. சி. செல்லத்துரை அவர்களால் சடுதியாய் ஒழுங்குபண்ணப் பெற்றதேயெனினும் பெருந்தொகையினர் சமுகமளித்தனர் என்பதும் அது நன்கு நடைபெற்றுச் சித்தி எய்திற்று என்பதும் குறிப்பிடத் தக்கன.

# மாணுக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

## பெரியபுராண வசனம்

### திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் புராணம் V

சென்ற பாடத்தில் - திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் - திருக்கொள்ளம்பூதூர் என்னும் தலத்திற்குச் சென்று பதிகம்பாடி வணங்கினுர் என்பதுவரையிற் படித்தோம்.

### புத்த நந்தியும் சாரி புத்தனும்

பின்னர் நாயனுர் போதிமங்கை என்னும் ஒரு தலம் வழியாகப் போகும்போது அடியார்கள் கடலொலி போல வாத்தியங்களை இசைத்துக்கொண்டு சென்றனர்; பரசமய கோளரி வந்தார்! சைவ சிகாமணி வந்தார்! வந்தார்!! என்று.

போதிமங்கை என்பது இப்பொழுது பொண்டிச்சேரி; பாண்டிச்சேரி, புதுச்சேரி என அழைக்கப்படுகின்றது. அங்கு பௌத்தர்களும் இருந்தனர். இந்த வாத்திய ஒலிகளும் பிறவும் அவர்களுக்கு நாராசம் போல இருந்தன. பொருமை கொண்டனர். அவர்கள் தலைவனுக்குப் பெயர் புத்தநந்தி என்பது. அவன் ஒரு பெரிய பண்டிதன். விஷயத்தைச் சொன்னுர்கள் அவனிடம். அவர்களுடைய சொல் - அடியார்கள் ஆரவாரம் – திருச்சின்னங்களின் ஒலி இவையெல்லாம் நாராசம்போலஅவன் செவியுள்ளும் புகுந்தன. கோபங்கொண்ட அவன் கூட்டத்தோடு சென்று "எங்களை வென்றன்றோ சின்னங்களை ஒலிக்கவேண்டும்" என்று தடுத்தான். தொண்டர்கள் பிள்ளையாருக்கு இதனைவிண்ணப்பித்தனர். பிள்ளையார், "நாம் வருமிடத்திலே இது ஒரு அழகு! வாது செய்யும் போது யாவுமறிகின்ருேம்" என்ருர்.

வாது புரியும் நேரம்வரை பொறுக்க முடியவில்லைத் தேவாரம் எழுதும் அடியவருக்கு. அவ்வளவு வேகமும் கோபமும் அவருக்கு. அவர் தேவாரத்திலே;

"புத்தர் சமண்கழுக்
கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள்
தெளிந்து தேறின
வித்த நீறணி
வார்,வி னைப்பகைக்
கத்திர மாவன
வஞ்செழுத் தும்மே"

என்னுந் திருப்பாட்டை ஓதி "இப்புத்தனது சிரம் இடியிடித்து உருண்டு விழக் கடவது" என்ருர். அப்படியே இடியிடிக்கப் புத்தநந்தியின் சரீரமும் தலையும் இரு கூருயின. கண்ட பௌத்தர் கூட்டம் கலைந்து ஓடினது. சிலர் இதனைப் பிள்ளையாருக்குச் சொன்னுர்கள். அவர் "அங்ஙனம் எதிர்ந்த விலக்கை நீக்கும் முறை அதுவே, ஹர ஹர என்று ஆரவாரியுங்கள்" என்ருர். இச்செய்கை வஞ்சனையோ அன்றிச் சமய உண்மைதானே என மருண்டனர் பௌத்தர். சாரி புத்தன் என்று ஒரு புத்தன். சாக்கியமுனி எனவும்படுவான். அவன் தலைமையில் தருக்கம்பேச மீண்டும் வந்தனர் பிள்ளையாருக்கு முன்னுல் எல்லாப் புத்தர்களுஞ் சூழ்ந்தனர், புக்தநந்தியின் சிரசைப் பொடிபடுபதிய தமிழ் வேத லேககர் எழுந்தார்; பிள்ளையாருக்கு முந்தி. பிள்ளையாரை வணங்கினுர். சாரி புத்தனேடு வாது புரிந்து வென்ருர். பௌத்தர் தோற்றனர். சம்பந்தரை வணங்கினர். சமய உண்மைகளைப் பௌத்தர்களுக்குச் சம்பந்தர் உணர்த்தினுர். உண்மை யுணர்ந்து எல்லாப் பௌத்தர்களும் சைவர்களாயினர்.

### அப்ப ரெங்குற்ருர்?

### அடியே னிங்குற்றேன்!

பின்னர் சம்பந்தர் அப்பர் சுவாமிகள் திருப்பூந்துருத்தியில் இருப்பதை அறிந்து அங்குச் சென்ருர். அப்பரும் அறிந்து அடியார்களுடன் எதிர்கொண்டார். கூட்டத்தோடு கூட்டமாகச் சென்ற அப்பர்—என்ன செய்தார் தெரியுமா? சம்பந்தருக்குத் தெரியாமல் அவர் வந்த பல்லக்கைத் தாங்கிக்கொண்டு வந்தார். திருப்பூந்துருத்தி என்ற தலங் கிட்டியது. ஞாபகம் வர "அப்பர் எங்குற்ருர்?" என்ருர் சம்பந்தர். "அடியேன் இங்குற்றேன்" என்றது ஒரு குரல் சிவிகையின்கீழிருந்து. பிள்ளையார் மனம் பதைபதைத்தார். உடனே சிவிகையை விட்டு இறங்கி அப்பரை வணங்கினுர். அப்பரும் வணங்கினுர். இருவரும் சுவாமி தரிசனஞ் செய்தனர். கலந்துரையாடிக் கொண்டு' அப்பர் பாண்டி நாடேகப் பிள்ளையார் சீர்காழிக்குச் சென்ருர்.

### ஆண்பனைகள் பெண்பனைகளாகின விந்தை

சில நாட்களில் தொண்டை மண்டல யாத்திரை செய்ய விரும்பினுர் சம்பந்தர். உடன் செல்ல விரும்பிய தந்தையாரை—யாகஞ் செய்துகொண்டிருக்குமாறு இயம்பித் தாமே புறப்பட்டார் தனிய. பல தலங்களையுங் கண்டுகொண்டு தொண்டை நாட்டை யடைந்தார். அங்கு திருவோத்தூர் என்று ஒரு ஊர். அங்கு இருக்குநாளில் சிவனடியார் ஒருவர் வந்தார். அவர் பிள்ளையாரை வணங்கிப் பின்வருமாறு கூறினுர். "பரசமயங்களைப் பாற்றி, பாற்றி—அழித்து, சைவத் தாபனஞ் செய்தருளும் பெருமானே! பரம சிவனுக்கு அடியேன் பனைகளுண்டாக்குகிறேன். எல்லாம் ஆண்பனைகளாகிக் காயாவாயின. "நீர் ஆக்கும் பனைகளைக் காய்க்கப்பண்ணக் கூடுமோவெனச் சமணர் கூட இகழ்ந்து நகைசெய்தனர். அருள் புரிதல்வேண்டும்" என்ருர் பிள்ளையார். கோயிலுக்கு விரைந்து சென்று மனம்பரிந்து "பூந்தேர்த்தாயன" என்று தொடங்கிக் "குரும்பையாண்பனை யீன்குலை யோத்தூர்" என்று பதிகமருளினுர். என்ன அதிசயம்! திருவருட்பெருமை! மகிமை! ஆண்பனைகளெல்லாம் மாறிக் குலைகளோடுகாணப்பட்டன. சமணர்கள் கண்டு அஞ்சி நாட்டைவிட்டு ஓடினர். இங்ஙனமாக,

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# திருமாலிருங்குன்றின் சிறப்பு

## காத்தற் கடவுள் களிப்புடன் வைகும் கருங் குன்றமாயது

ஸ்ரீ வ. குகசர்மா

(முற்ருெடர்)

அதுஆரவாரத்துடன்பாய்ந்து கீழ்நோக்கி வரும். வரும்பொழுது சந்தனம் மயிற்பீலி மணிகள்முதலிய மலைபடு திரவியங்களைக் கொண்டு வரும் அங்கேதெய்வமகளிர் தம்காற் சிலம்பு ஓசையிட வந்து சிலம்பாற்றில்நீராடுவார்கள் சிலம்பாறு பாய்ந்து வரும் அழகை ஒருவாறு உருவகப்படுத்தின் பல தேவரது மலைபோன்ற மார்பின்கண்ணே புரளும் வெண்கடம்பு மாலையைப் போன்றிருந்தது என்பர்.

மாலிருஞ் சோலையிடத்தே எழுந்தருளியிருக்கும் திருமாலிடத்தே ஒரு பெண் காதல் கொள்கிருள். அதனுலே கூடல் இழைத்துச் சோதிடம் பார்க்கிருள். இதை நாச்சியார் திருமொழி நயமுறை எடுத்துக்காட்டுகிறது. 'தெள்ளியார் பலர் கைதொழும் தேவனுர் வள்ளல் மாலிருஞ் சோலை மணுளர்பள்ளிகொள்ளுமிடத் தடி கொட்டிட கொள்ளுமாகில் நீ கூடிடு கூடலே'' என்பது அச்செய்யுள்.

வெயிலைக்கண்டால் இருளில்லாது. ஆனுல் வெயிலின் நடுவே இருள் வளரும் ஓர் புதுமையைப் பரிபாடலில் காண்கிறேம். திருமால் பீதாம்பர உடை அணிந்திருக்கிருர். அது வெயிலைப் போல ஒளி வீசுகிறது. கடும் வெயில் அல்ல குளிர்ச்சியையுடைய இளவெயில். அதனிடையே இருள்வண்ணராகிய திருமாலின் உருவம் தோற்றுகிறது.

திருமாலிருங் குன்றத்தில் உள்ள திருமாலைத் தரிசிக்க முன்பு குன்றமே திருமாலின் உருவைக் காட்டி நம்மைப் பரவசமடையச்செய்துவிடும். இயற்கை யெங்கும் அடியார்கட்கு இறைவன் உருவம் தானே தோற்றுகிறது. முகில் திருமாலின் உருவம். மின்னல் அவர் மார்பில் புரளும் ஆரம். தாமரைமலர் அவருடைய கண்கள். இவ்வாறு திருமாலைக் காண்கிருர் பூதத்தாழ்வார். திருமாலிருங்குன்றத்திலே உள்ள [illegible]களிலே எல்லாம் நீராற்பல மலர்கள் மலரும். அம்மலர்கள் திருமாலின் திருமேனியை நினைப்பூட்டும், அதைச் சுற்றி மலர்ந்த அசோக மலர் திருமாலின் பீதாம்பர உடையைப்போலவும் காயும் கனியும் கலந்து மலர்ந்த வேங்கை மரம் பல இரத்தினங்கள் அழுத்தப்பெற்ற முடியைப் போலவும் இருப்பதால் அது மாயோனுெத்த மாலிருங் குன்றமாகத் திகழ்கின்றது. ஆகையால் அம் மலையைக் கண்டு பணிமின்கள் என்பர் புலவர். அங்கே குயில் கூவும் மயில் ஆடும் மந்தி பாயும் முல்லை மலர் மிகுதியாக மலரும். இத்தன்மையான இயற்கைவளம் பொருந்திய மலையில் நீல மலைபோன்ற உருவமுடையவரும் கருடக் கொடியையுடையவரும் தண்டு, சக்கரம், சங்கு, வில், அம்பு, பராவனை, வாள் என்பவற்றை ஏந்தியவருமாகிய திருமால் எழுந்தருளியுள்ளார். அவரை நாம் வணங்க வேண்டும். வணங்கினுல் "தூமலர் தூவித் தொழுது வாயினுற் பாடி, மனத்தினுல் சிந்திக்கப்போய பிழையும் புகுதருவான் நின்றனவும் [illegible]" என நாச்சியார் திருமொழி கூறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப,

### தமழ்மறைக்கழகமும் வைகாசி அனுஷமும்

மேற்கண்ட விஷயமாக ஓர் கட்டுரை சென்ற 21-6-57-ல் தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்ததைக்கவனித்தோம். ஆனல் இச்சபையார் "நாவலர் ஐயர்" கூறியவாறு மாசி உத்திரத் தினத்திலன்றுதான் திருவள்ளுவர் நாளைக் கொண்டாடினர்களென்றும்இந்நாளிற்றனே இச்சபையில் இத்தினம் நெடுங்காலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறதென்பதையும் அறியத் தருகின்றேன்.

தமிழ்மறைக் கழகத்தார் வைகாசி அனுடத்தில் இந்நாளைக் கொண்டாடும்படி இச்சபைக் கனுப்பி யிருந்த வேண்டுகோளை இச்சபையார் ஏற்றுக்கொள்ளவில்லை.

இங்ஙனம்
அ. நாகலிங்கம்
காரியதரிசி

சைவமகாசபை
காரைநகர்
28—6—57.

## மாணக்கர் மதி வள மன்றம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

**பிள்ளையே நம்மைப் பாட மறந்தாயோ?**

சம்பந்தர் பின்னர்க் காஞ்சீபுரம் வழியாகத் திருவாலங்காடு என்னுந் தலத்தை யடைந்தார். அங்கு, "நம்மைப் பாடுதற்கு மறந்தனையோ" எனச் சொப்பனங் கண்டு "துஞ்சவருவாரும்" என்னும் பதிகமருளினர். அங்கு நின்று திருக்காளத்திக்குச் சென்று — கண்ணப்பரைக் கண்ணரைக் கண்டு கும்பிட்ட பயன் காண்பார்போலக் கண்ணப்பரைக் கைதொழுதார் என்று சேக்கிழார் அழகாகக் கூறுகின்றார். அவர் தொண்டைப் புகழ்ந்து — திருக்காளத்தியின் வடக்கு மேற்குப் பகுதிகளில் தமிழ்மொழி வழக்கில்லாமை கண்டு பதிகங்கள் பாடித் திருவொற்றியூருக்கு மீண்டார்.

**பாவை. யான், பணமெல்லாங் கொடுத்தேன்**

திருமயிலாப்பூர் என்று ஒரு ஊர்' அங்கு சிவநேசர் ஒன்று ஒருவர். பெருஞ் செல்வம் கீர்த்தி எல்லாம் உள்ளவர். ஆனல் ஒரு குறை. நெடுங்காலம் பிள்ளைப்பேறு இல்லை அவருக்கு. எத்தனையோ சிவ பூசை, மாகேசுர பூசைகள் புரிந்து ஒரு பெண்ணைப் பெற்றூர், பிள்ளை இலக்குமிபோல நல்ல அழகி. பூம்பாவை என்று பெயரிட்டார். சம்பந்தர் ஞானப் பாலுண்டது;— பரசமயங்களை யழித்துச் சைவத்தை வளர்த்து வருவது யாவுமறிந்து—சிவநேசர் அவர்மீது அன்பு கொண்டார். பூம்பாவையின் நல்லியல்புகளைக் கண்டு—"இவளை மணப்பவரே எனது திரவியங்களுக்கு உரியவர்" எனறூர். பாண்டி நாட்டிலே அவர் செய்த அருட் செயல்களை அறிந்தவர்கள் சிவநேசருக்குச் சொன்னூர்கள். களிப்படைந்த சிவநேசர் பிள்ளையாரைத் திக்கு நோக்கி வணங்கினர். "என் பூம்பாவை - யான் - என்பணம் எல்லாம் அவருக்கேகொடுத்தேன் என்றூர்.

ஒருநாள் மல்லிகை மலர் பறித்தாள் பூம்பாவை. அப்பொழுது பந்தரில் மறைந்து கிடந்த பாம்பு ஒன்று தீண்டிவிட்டது. காளி, காளாத்திரி, யமன், யமதூதி என்று நான்கு பற்கள் பாம்புக்கு. அவை நன்ருய்ப் பதிந்து விட்டன. வைத்திய முறைகள் ஒன்றும் பலிக்கவில்லை. இறந்துபோனுள். "சம்பந்தருக்கென்று சொன்னமையால் யான் துன்புறவேண்டியதில்லை" என எண்ணினர் சிவநேசர். தகனஞ் செய்து எலும்பையுஞ் சாம்பரையும் குடத்தில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்.

வளரும்

## பெரிய புராண காலக்ஷேப நிறைவு

கந்தர்மடம் சித்திவிநாயயர் ஆலய மகோற்சவம் விமரிசையாக நடந்தது. இந்நாட்களில் பெரிய புராண கதாகாலக்ஷேபம் இனிது நடந்தது. சென்ற 30-6-57 -ல் புராண பூர்த்தியுற திருமுறை ஊர்வலமும் நடைபெற்றன. காலக்ஷேபம் நடத்திய புலவர்மணி முத்தமிழ்மணி, பிரம்மஸ்ரீ. C. S. S. மணிபாகவதரவர்களுக்கு வடமாகாண அதிபர், உயர்திரு. M. ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமையில் பொன்னுடை புனைந்து சன்மானஞ் செய்யப்பெற்றது. பண்டிதர். வ. மு. இரத்தினேஸ்வர ஐயர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முதலிய அறிஞர்கள் பாராட்டுரை பகர்நதனர். தேவஸ்தான பரிபாலகர் பிரம்பஸ்ரீ. க,சு. பரமேஸ்வரக் குருக்களவர்கள் யாவரையும்வரவேற்று உபசரித்து நன்றியுரை நவின்றூர்.

தலைவரவர்கள் சைவாலயங்கள் சைவசமயத்திற்குச் சிறந்த முக்கிய தானங்கள் என்றும், தரிசிப்பவர்களுக்கு இதுபோன்ற புராணப் பிரசங்கம் அவசியம் என்றும்குருக்களவர்களின் சிரத்தையை ஏனைய ஆலய முதல்வர்களும் பின்பற்ற வேண்டியது அவசியம் என்றும், சமயம், நமது தமிழ் மொழி முதலியன செழிக்க இது ஏதுவாகும் என்றும் குறிப்பிட்டார்.

### சமாதான மகாநாடு

மொழிப் பிணக்கால் உண்டான குழப்பத்தை நீக்கி இந்நாட்டில் சமாதானம் நிலவச்செய்யும் நோக்கத்துடன் ஒன்பது தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் சேர்ந்த மகாநாடொன்றை நடத்த இலங்கைச் சனநாயக தொழிலாளர் மகாநாடு தீர்மானித்துள்ளது.

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

### திருவள் ளுவர் திருநாள்

திருவள்ளுவ நாயனுர் திருநாள் பற்றிப் பண்டித வித்துவான் பொ. கந்தையனுர் அவர்கள் 21-6-57 ல் வெளிவந்த இந்துசாதனப் பத்திரிகையில் சைவ உலகம் நன்கு அறியத் தெளிவாக விளக்கி ஒருகட்டுரை எழுதியுள்ளார்கள. இது பெரிதும் போற்றுதற்குரியதாகும். இவ்விதமாக ஒவ்வொரு சைவ இளைஞர்களிடத்தும் சைவாபிமானமும் சிவநெறிப் பற்றும் இருத்தல் வேண்டும. பண்டிதர் பொ. கந்தையனுர் வெளிப்படுத்திய கட்டுரை முற்றிலும் உண்மையாகும். "உள்ளிருந்தார்க்குத் தெரியும் உள்வருத்தம்" என்றபடி அவர்கள் கழகக் குழுவில் இருந்து விலகிய பண்டிதருக்கே உண்மை விளங்கும். இதனை ஒருவராலும் மறுத்துரைக்க முடியாது.

இதற்குத் தமிழ் மறைக் கழகம் என்ன சொல்லப் போகின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவரையா கை வைத்த எந்த விஷயமும் மிகச் சிறந்ததாகவே இருக்கின்றது என்பது தமிழ் மறைக் கழகத்தார் உட்பட யாவரும் ஒப்புக்கொள்ளும் உண்மையன்றோ?

நாவலர் அவர்கள் எந்த விஷயத்தையும் தீர்க்கமாக ஆலோசித்தே செய்பவர்கள். அவர்கள் திருவருட் செல்வம் பெற்ற ஒரு குருமூர்த்தி, ஐந்தாங்குருபரன், சற்குருநாதசுவாமி, சைவப் பிரசாரகர் என்றெல்லாம் தமிழ்நாடுபோற்ற அவதரித்தவர்கள். அந்தச் சைவ வள்ளலார் மாசி உத்திரத்தை வள்ளுவர் நாளாக எடுத்துரைக்க தமிழ் மறைக் கழகத் தலைவர் தாம் ஒரு புதிய தினத்தை உண்டுபண்ணியது ஒரு பெரும் விந்தைக்குரியதாகும். தமிழ்கத்துப் பெரியோர்களான திருவாளர்கள் கா. சுப்பிரமணிய பிள்ளை, சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை, மகாவித்துவான் த. மீனுட்சிசுந்தரம் பிள்ளை போன்றோர் வள்ளுவரைச் சைவசித்தாந்தி எனப்போற்றி அவர் திருநாள் மாசி உத்திரமெனப் போற்றி வந்தனர்.

இத்தகைய பெரியார்களும் இவர்களுக்குமுற்பட்ட நாவலர் அவர்களும் ஒப்புக்கொண்டு எழுதிய மாசி உத்திர உண்மைக்கு மாறாக தமிழ் மறைக் கழகக்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

## தனிச் சிறப்புடைய திருக்குறள்

### பிற மொழிப் பொருள் கலவாப்பெருமை வாய்ந்தது

### தமிழ்மொழியின் மறுமலர்ச்சிக்கு நாம் செய்யவேண்டியவை

திருச்சியில் நடந்த திருக்குறள் மகாநாட்டில் கலாநிதி மா. இராசமாணிக்கனூர் பேசும்போது "திருக்குறட் கருத்துகள் பிறமொழிக் கருத்துகள் கலவாதவை" என்னும் உண்மையை வலியுறுத்தினர். அவர் பேச்சுப் பின்வருமாறு.

"முற்காலத் தமிழர்களை நினைக்கையில் இன்பமும் இடைக்காலத் தமிழர்களை நினைக்கையில் துன்பமும், தற்காலத் தமிழர்களை நினைக்கையில் இரண்டும் கலந்த ஒன்றும் ஏற்படுகின்றன. 30ஆண்டுகளுக்கு முன்பு திருக்குறளைப்பற்றிப் பேசுவாரே இல்லை எனலாம். இக்காலத்தில் இந்த அளவு திருக்குறள் பரவி இருக்கும் பெருமை இருபாலாரைச் சாரும். ஒருவர் முன்னுள் கல்வி அமைச்சர் திரு. அவினுசிலிங்கம். மற்றெருவர் பெரியார் ஈ. வே. இராமசாமி சமுதாயத்துறையில் பாடுபடுவதுடன் இலக்கியத்திற்கும் பெரியார் பாடுபட்டு வருவது போற்றத்தக்கதாகும். 10 ஆண்டுகளாகத் தான் திருக்குறள் மேலை நாடுகளில் பரவி வருகிறது. தமிழில் எழுதப்பட்டிருக்கும் பல அரிய கருத்துக்களைத் தவருக விளக்கிக் கொண்டு மொழிபெயர்த்திருக்கிருர்கள். திருக்குறள் முதல் நூல் அல்ல, வழி நூலாகும். இதில் வேத நூல்களில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களும், சாணக்கியன் எழுதிய அர்த்தசாத்திரத்திலுள்ள அரசியல் கருத்துகளும், வத்சல்ய முனிவரெழுதிய காமநூலிலுள்ள கருத்துகளும் கூறப்பட்டிருக்கின்றன. என்றெல்லாம் தவருன முறையில் கூறப்பட்டிருக்கிறது! இவற்றையெல்லாம் தமிழ் மக்கள் படிக்கும்பொழுது உண்மையிலேயே இரத்தம் கொதிக்கிறது.

வெள்ளையர்கள் நமது நாட்டுக்கு வந்ததால் நமக்கெல்லாம் ஒரு பெரிய நன்மையைச் செய்திருக்கிருர்கள். பிறமொழி நூல்களை ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கிருர்கள். அவற்றின் மூலமாக வேதக் கருத்துக்களையும், அர்த்த சாத்திர அரசியலையும், காம நூல் உண்மைகளையும் நாம் அறிய மிக எளிதாக உள்ளது.

வத்சல்ய முனிவர் எழுதிய காமநூலைத்தழுவி எழுதப்பட்டது இன்பத்துப் பால் என்று கூறுகிருர்கள். இது முற்றிலும் தவறு அதில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களை நோக்குமின் யாகமென்ற பெயரால் நடத்தப்படும் அநீதி, காமக் கிளர்ச்சிகளைத் தூண்டிவிடும் ஆபாசமான கருத்துக்கள் ஆகிய இவற்றை எடுத்துரைக்க நான் விரும்பவில்லை. திருக்குறளில் ஒருவனும் ஒருத்தியும் வாழ வேண்டிய வழிகளையும், உள்ளக் கிடக்கை யையும் மிக அழகாக வள்ளுவர் கூறி இருக்கிருர். எனவே காமக் கருத்துக்கொண்ட காமநூல் வேறு காதல் கருத்துக்கொண்ட திருக்குறள் வேறு.

வேதக்கருத்துக்கள் திருக்குறளில் இருப்பதை நான் மறுக்கவில்லை. ஏனெனில் அவை பொதுக் கருத்துக்கள். புத்தர், ஏசு, காந்தி ஆகியவர்கள் எப்படி அகிம்சை, அன்பு, அறம் இவற்றை ஒத்தமுறையில் உரைத்தார்களோ அதுபோல இலக்கியக் கருத்துக்கள் இப்பொழுது வளம் பெற்று வருகின்றன. தமிழன் விழிப்புணர்ச்சிபெற்று

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவாசகர் குருபூசை

## காரைநகரில்

காரை நகர்ச் சைவ பரிபாலனவித்தியாலய மண்டபத்தில் சைவப் பிரசாரகர் ஸ்ரீமான் வே. சோமசுந்தரம் அவர்கள் மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் பொருள்பற்றிப் பேசும் போது சைவ சமய மாட்சி பற்றியும் சைவ சமயிகள் அனுட்டிக்க வேண்டிய விதிகள்பற்றியும், மாணிக்கவாசகர் சரித்திரத்திற் பொதிந்துள்ள உண்மைகளை எடுத்து விளக்கிச் சிறந்த பிரசங்கஞ் செய்தார்.

## தெல்லிப்பழை கிழக்கில்

தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் 1-7-57 திங்கட்கிழமை காலை 8-45 மணி தொடக்கம் சமயாபிவிருத்திச்சங்க ஆதரவில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை சிறப்பாக நடைபெற்றது. பிற்பகல் 3-30 மணியளவில் சேர். கனகசபை வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்களால் "மாணிக்கவாசக சுவாமிகள்" என்னும் பொருள்பற்றிப் பிரசங்கம் செய்யப்பெற்றது. மணிவாசகப் பெருமான் சைவத்தின் மேன்மையை நிலைநாட்டியமைபற்றியும் திருவாசகத்தின் பெருமை பற்றியும் சபையோர் நன்குணரத்தக்க வகையில் பேசினார். பண்முறைகளும் திருவாசகப் பாடல்களும்ஓதப்பெற்றன. தலைமையாசிரியர் திரு. செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டம் பி. ப. 4-30 மணியளவில் நன்றியுரையுடனும் தேவார பாராயணத்துடனும் இனிதே நிறைவேறியது.

——

## தெல்லிப்பழையில்

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையாரால் ஷ்டி குருபூசை, காசி விநாயகர் ஆலய மண்டபத்தில் ஆனி மீ 17உ (1-7-57) திங்கட்கிழமை மாலை சபைத் தலைவர் பிரம்மஸ்ரீ மு. சிவகடாக்ஷக் குருக்கள் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது

பிற்பகல் 4½ மணிக்கு ஸ்ரீ காசி விநாயகப்பெருமானுக்கும் மணிவாசகப் பெருமானின் திருவுருவப்படத்திற்கும் விசேட ஆராதனைகள் நடைபெற்று 5 மணியளவில் கூட்டுப் பிரார்த்தனையுடன் கூட்டம் ஆரம்பமாயது. தலைவர் பேசுகையில் மாணவர்கள் மணிவாசகப்பெருமானின் திருவாசகத்தைப் பத்தியுடன் பயில வேண்டுமென்றும், திருவாசகத்தைப் பாடுங்கால் மணிவாசகர் தும்பிமுதலாக யாவற்றிற்கும் விளிப்பூட்டியுள்ளாரென்றும், திருவாசகம் படிப்பவர் மனத்தை உருக்கும் தெய்வீக சக்தி வாய்ந்ததென்றும் குறிப்பிட்டு இக் குருபூசையை நடத்துவதற்குப் பொருள் உதவிபுரிந்த திரு. சுவாமிநாதன் அவர்களையும் பாராட்டினார். அத்துடன் அப்பெரியாரே வருடாவருடம் இக்குருபூசைக்குப் பொருள் உதவிசெய்வாரென்றும் குறிப்பிட்டார்.

அதன்மேல் பலமாணவர்களால் தேவாரம் பாடல் உபந்நியாசஞ் செய்தல் முதலியன நடைபெற்றது செல்வி சி. சின்னம்மா நாயனுரைப்பற்றி எடுத்துரைத்தார். கூட்டம் 6½ மணியளவில் தேவார பாராயணத்துடன் நிறைவுற்றது.

## உரும்பிராயில்

உரும்பிராய்சைவத்தமிழ் வித்தியாசாலையில் மேற்படி குருபூசைவிழா சிறப்பாக நடாத்தப்பட்டது. சமயசன்மார்க்கப் பொறுப்பாளர் ஆசிரியர் திரு. அ. பஞ்சாட்சரம் விழாவை ஆரம்பித்து வைத்தார். ஆசிரியர் வி. மயில்வாகனம் அவர்கள் மணிவாசகர் பெருமையை இசைக் கதையாய் நடாத்தினார். ஆசிரியர் வே. குலசேகரம்பிள்ளையவர்கள் திருவாசகச் சிறப்பு என்னும் பொருள் பற்றிப் பேசினார். மாணவர்கள் எல்லோரும் கூடித் திருவாசகம் பாடினர். திரு. அ. சேனாதிராசா அவர்கள் வருடாவருடம் மேற்படி குருபூசையை நடத்த உதவி புரிகின்றார்.

# கொழும்பு விவேகானந்த சபையில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

30-6-57 ஞாயிறு பிற்பகல் 6-30 மணிக்குக் கொழும்பு விவேகானந்த சபையில் மாணிக்கவாசகர் குருபூசைவிழா கொண்டாடப்பட்டது. சபைத் தலைவர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது, தலைவர் தமது உரையில் விவேகானந்தசபை பல வருடங்களாகப்பலநாயன்மாருடைய குருபூசைகளையும் கொண்டாடி வருவதைப் பாராட்டினார்கள். அவர் தமது உரையில் மேலுங் கூறியதாவது:

"உலகில் கடவுளும், சமயமுந்தான் மிகப் பெரிய விஷயங்கள். கடவுள், சமயம் ஆதிய இரண்டையும் மக்கள் போற்றி வருகிறார்கள். உலகை உய்வித்த நாயன்மார்களுள் ஒருவரான மாணிக்கவாசகரின் குருபூசையை இன்று கொண்டாடுகிறோம். மாணிக்கவாசகசுவாமிகளும், மற்றும் பல நாயன்மார்களும் சைவசமயம் குன்றியிருந்த காலத்தில் தோன்றினார்கள். இவர்கள் எல்லோரும் கடவுளின் அவதாரங்கள். மாணிக்கவாசக சுவாமிகள் இலங்கைக்கும் வந்திருக்கக் கூடும் என்று ஒரு நம்பிக்கை இருக்கிறது."

திரு. மு. வைரமுத்து அவர்கள் பேசும் போது மாணிக்கவாசகர் என்றவுடன் எங்கள் மனத்தில் எழுவது திருவாசகம். அது மணிவாசகரின் அனுபவத்தின் பயனை நமக்குக் கிடைத்தது. திருவாசகத்திலுள்ள பாக்கள் மற்றெல்லாவற்றையும்விட உருக்கமும் ஓசையும் மிகுந்தவை. எமக்கு நேரிடும் கவலைகளைத் தீர்ப்பதற்குத் திருவாசகப் பாக்கள் உயர்ந்த மருந்தாகும். கோபத்தை அடக்குவதற்குச் சில பாட்டுக்களே போதுமானவை.

"நாயன்மார்கள் எல்லோரும் பல பல அற்புதங்கள் செய்திருக்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் இறைவன் துணை நின்றிருக்கிறார். இவர்களுடன் இறைவன் மாறுவேடத்தில் இருந்து அளவளாவியிருக்கிறார். ஆனால் அவர்களுக்கெல்லாம் அவ்வப்போது நாம் இறைவனுடன்தான் பேசுகிறோமென்ற எண்ணம் எழுந்ததில்லை. இறைவன் மறைந்த பின்னர்தான் 'நாம் இவ்வளவு நேரமும் பேசியது எம்பெருமானுடன்' என்ற எண்ணம் எழுகிறது. ஆனால் மாணிக்கவாசகசுவாமிகளோ, இறைவனுடனேயே நாம் இப்போது பேசுகிறோமென்று அறிந்துகொண்டு பேசும் பாக்கியம் பெற்றவர். இறைவன் தாமாகவே அவரை வந்து ஆட்கொள்ளும் பாக்கியம் பெற்றவர்.

"அன்பு வழியிலேதான் இறைவனை அடைய முடியுமேயன்றி வெறும் நடிப்பினால் அவர் பாதங்களை அடைய முடியாது. இதனைச் செம்மனச்செல்வியாரின் சரித்திரம் நமக்கு எடுத்துக்கூறும் எவ்வளவோ அல்லல் மிக்க நிலையிலிருந்த அவர் இறைவனை உண்மை அன்புடன் வேண்டினார் இவருக்கு இறைவன் கூலியாளாக வந்தார். இதிலிருந்து அவர் இறைவன்பால் வைத்த அன்பு எத்தகையது என்றும் இறைவன்பால் வைக்கும் அன்பின் மகிமை எத்தகையது என்றும் நாம் உணரலாம்.

இறுதியாகப் பேசிய தேவகி பசுபதி அவர்கள், திருவாசகத்தின் மகிமை பற்றியும் அதைப் பாடிய மாணிக்கவாசக சுவாமிகளின் மகிமைபற்றியும் விரிவாக எடுத்துக்கூறினார்கள்.

விவேகானந்த வித்தியாலய மாணவிகளால் பக்திப் பாடல்களும், திரு. க. செல்லத்தம்பி அவர்களால் திருவாசகப் பாடல்களும்பாடப்பட்டன.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்
இல. MB/708

ஞானமூர்த்தி மார்க்கண்டும் பெண் ஜெகதீசுவரி இருவரும் கொக்குவில் கிழக்கு
—வழக்காளிகள்.

எதிர்

1. செல்லப்பா முத்தையாவும் பெண்
2. நாகரத்தினமும் —இருவரும் கொக்குவில் மேற்கு
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் MB/708-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1957ஞு புரட்டாசிமீ 14உ சனிக்கிழமை பிற்பகல் 4-30மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 2007/- ரூபா 1500/ க்கு 16 12-5, தொடக்கம் 2-2-56 வரைக்கும் 9 வீத வட்டியும் அதின் பின் மொத்தத் தொகைப் பணத்துக்கு 2-2-56 தொடக்கம் பணம் கொடுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 182/58.

காணி விபரம்

யாழ்ப்பாணம் — நல்லூரைச் சேர்ந்த கொக்குவிலில் காட்டுப்புலம் என்னும் காணி நீ. இ 12 குழி 15¾ வீடும் மேற்கெல்லைக் கிணற்றில் பங்கும் வான்பயிர் செய்பயிர்களும். எல்லை கிழக்கு சின்னப்பு பெண் இலட்சுமியின் ஆதனம் மறுபேரும், கை ஒழுங்கையும், வடக்கு நாகமுத்து பெண் தில்லையம்மாவின் ஆதனமும் மறுபேரும். மேற்கு முருகேசு நமசிவாயத்தின் ஆதனம் மறுவும், தெற்கு அப்பாச்சிப் பிள்ளை கயிலாசபிள்ளையின் ஆதனமும் மறுபேரும் வடக்கு எல்லை காணிக்குரிய கிணற்றுப்பங்கும் வழிவாய்க்கால் உருத்து பிறநீங்கலாக.

வ. அ. துரையப்பா
கொமிஷனர்.

யாழ்ப்பாணம்
1-7-57.
M 56 5-6-57

## திரு. வீ. வீரசிங்கத்தின் விளக்கத்துக்கு மறுப்பு

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

போது இருக்கும் தமிழ்ப் பேசும் பாராளுமன்ற அங்கத்தவர்கள் அனைவர்களும் சட்டம் தெரியாதவர்கள் என எண்ணுகிறீர்களா? இந்தியரின் குடியுரிமை விகிதம் எனக்குத் தெரியாதெனக் கூறுகின்றீர் இது முக்கியமாய் அறியப்படவேண்டியதொன்றன்றோ?

வளரும்

——

## இலங்கை சைப்பிரசாகுமா?

—0—

தமது நாட்டிலுள்ள தமிழ்ப்பேசும் பகுதிகளின் நல்லெண்ணத்தைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை இலங்கை முதல் மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகவுக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கை ஓர் சுவிட்சர்லந்தாக விளங்குமோ அல்லது சைபிரசாகச் சீர்கெடுமோ என்பதைச் சில வாரங்களில் இலங்கை மக்கள் செய்யும் நடவடிக்கை முடிவு செய்யும். இக்காரணத்தால் முதல் மந்திரிகள் மகாநாட்டுக்கு வரமுடியாத ஸ்ரீ பண்டாரநாயக தமது [illegible]

செலவழிப்பாரென நம்பலாம் என்று 'மான்செஸ்ரர் காடியன்" என்னும் பிரித்தானிய பத்திரிகை சொல்லுகிறது.

——

# திருவள்ளுவர் திருநாள்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தலைவர் துணிந்தமை கண்டனத்துக்குரியதே. இப்படிப் பலர் பெரியோர் கருத்துக்களுக்கு மாறாகப் புதுப் புதுக் கருத்துக் கொண்டு பல இன்னல்களுக்கு ஆளாகி வருத்தமுற்றனர்.

இத்தகைய துன்பங்களுக்கு ஆளாகாமல் நாம் நல்வழி நின்று நன்மையைக் கடைப்பிடித்தொழுகல்வேண்டும். தமிழ்மறைக் கழகம், தமிழர்களின் பண்டைய சால்புவழி ஒழுகல் வேண்டும். தமிழர் பெருமையை உணர்தல் வேண்டும். இன்றைய தமிழகத்தில் சைவ அன்னையைப் போற்றவேண்டும். சைவத் தாய்க்கு அன்னிய மதங்களால் இடையூறு நேராதபடி பாதுகாக்க வேண்டும். சைவத் தாய்க்குச் சைவ முறைப்படி விழாஎடுத்து மகிழ வேண்டும். ஆதீனத் தம்பிரான் முனிவர்களை வரவேற்றுச் சிவமணம் கமழ அவர்களை நாடெங்கும் சொற்பொழிவாற்றச் செய்யவேண்டும். ஆலயங்கள்தோறும் புராண படனம் செய்விக்க வேண்டும். இத்தகைய நற்கருமங்களில் தங்கடமையைச் செலவிடாது வள்ளுவர் நாள் புதிதாகக்கொள்ளும் முயற்சியிற் காலம் வீண் கழிப்பது நன்றன்று.

ஆதலால் தமிழ்மறைக் கழகத்தார் உண்மையான தொண்டர்களாய் இருந்தால் பிரிவினை காட்டாமல் எல்லா மக்களும் ஒரேமுகமாய் மாசி உத்தரத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவதே சிறந்த மேலான சிவபுண்ணியமும் உத்தமோத்தமுமாகும்.

ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்கள்
திருவடி வாழ்க
செ. கோவிந்தசாமி
தென்மயிலை
2—7—57.

——

# பாடசாலை வேலை நிறுத்தம்பற்றி கல்விமந்திரி அறிவிப்பு

——

வேலை நிறுத்தம் ஏற்பட்டால் முதலாவதாக விஷயங்களை நுணுக்கமாக விசாரணை செய்ய வேண்டும். வேலை நிறுத்தத்தி லீடுபட மாணவர்களுக்கு ஆசிரியர்கள் தூண்டுகோலாக இருக்கின்றனர்என்பது விசேஷமாக ஆராயப்பட வேண்டும். அதன் பின்புதான் தலைமைக் காரியாலயத்துக்கு விஷயத்தை அறிவிக்கவேண்டும்.

வேலை நிறுத்தம் செய்பவர்களுக்கு எவ்வித வாக்குறுதிகளையும் கொடுக்கக் கூடாது. வேலை நிறுத்தத்தில் முடிவு காண்பதற்காக ஆசிரியர்களை இடமாற்றம் செய்யக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா

**616313,00**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14



## தனிச்சிறப்புடைய திருக்குறள்

4-ம்பக்கத் தொடர்ச்சி

விட்டான். அவன் இனிமேல் கீழ்நிலைக்குச் செல்லமாட்டான். தான் வாழப் பிறந்தவன் என்று ஒவ்வொரு தமிழனும் எண்ணிவிட்டான்.

திருக்குறள் நீதிநூல் அல்ல, வாழ்க்கை நூல். பிறப்புமுதல் இறப்புவரை அந்நூலிலே கூறப்பட்டிருக்கிறது. குறளில் மதம், சாதி, கட்சி என்ற கொள்கைகளுக்கு இடங்கிடையாது. இதை எம்மதத்தினரும், எக்கட்சியினரும் படிக்கலாம். திருக்குறளை பட்டிதொட்டியெங்கும் பரவச்செய்யவேண்டும். தமிழர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குத் தமிழிலேயே பெயரிடவேண்டும். தமிழிலேயே வாணிபம் நடத்தவேண்டும். வீட்டிலேயும் தூய தமிழிலேயே பேசவேண்டும். அப்பொழுதுதான் தமிழ் மறுமலர்ச்சி பெறும்.

— —



# தமிழிற் பேசுங்கள் எழுதுங்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் ஆதரவையும் அன்பையும் நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த ஆண்டுக்குரிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்:- சேர். கந்தையா வைத்தியநாதன்.

துணைக் காப்பாளர்கள்:- திரு. க.ச. அருள்நந்தி, திரு அ. சபாரத்தினம், திரு. யோன் செல்லப்பா, திரு. இ. பொ. செல்லையா, வணக். ஜே. தனிநாயக அடிகள், திருமதி. த. நடராசா, திரு. செ. நடராசா, திரு. சு. நடேசன், Dr. த. நல்லநாதன், திரு. ப. நவரத்தினராசா.

தலைவர்:- பண்டிதர் கா. பொ. இரத்தினம்.

துணைத்தலைவர்கள்:- திரு. வ. அருளம்பலம், திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை, திரு. செ. இராசையா, திரு. தா. கார்த்திகேசர், திருவாளர்கள் வ. குலநாயகம், வெ. சுப்பையா, சோ. நடராசா மூ. க. நடராசா, வே. க. ப. நாதன், மூ. வயிரவப்பிள்ளை.

பொதுச் செயலாளர்:- திரு. க. வயிரமுத்து.

துணைப் பொதுச் செயலாளர்கள்:- திரு. வ. யேசுரத்தினம்.

பொருளாளர்:- திரு. பெ. கணபதிப்பிள்ளை.

துணைப் பொருளாளர்:- திரு. வே. இராசமாணிக்கம்.

உறுப்புரிமைச் செயலாளர்:- திரு. வே. க. சண்முகம்பிள்ளை.

நிலைய அமைப்புச் செயலாளர்:- திரு. வே. கனகசபாபதி.

நூல்நிலையப் பொறுப்பாளர்:- திரு. மு. கணபதிப்பிள்ளை.

ஆட்சிக்குழு உறுப்பினர்:- திருவாளர்கள்: கா. கா. இரத்தினம், அ. வ. இரத்தினராசா, ப. இராசரத்தினம், வே. கணபதிப்பிள்ளை, சு. சங்கரசிவம், ஆ. சின்னத்தம்பி, சி. த. சிவநாயகம், மு. சிவராசா, கு. வே. செல்வத்துரை, சி. சேனாதிராசா, வை. பாலகிருஷ்ணன், சித்தாந்த புலவர். இ. சி. சோதிநாதன், சு. பொன்னம்பலம், க. மதியாபரணம், சு. ரேசையா.

கௌரவ கணக்காய்வாளர்கள்:- திரு. வ. செல்லையா, திரு. சு. வில்வராயன்.

பிரசித்த கணக்காய்வாளர்:- திரு. ஞா. இராசதுரை.

———

# உதவி பெறும் பாடசாலைகள்

1-ம் பக்கத் தொடர்ச்சி

கல்வி அமைச்சு கைப்பற்றியுள்ளது.

தகுந்த காரணங்கள்காட்டாமல் ஆசிரியர்களைத் தங்கள் மனம்போன போக்கின்படி நீக்க எத்தனிக்கும் முகாமைக்காரர்களுக்கு இது தகுந்த படிப்பனையாகும்.

சில முகாமைக்காரர்கள் அரசினரால் அளிக்கப்படும் நன்கொடைப் பணத்தை (grant) துர்ப்பிரயோகஞ் செய்து பாடசாலையின் பிரத்தியேகச் செலவுகளை ஆசிரியர்களிலேயே சுமத்தி விடுகின்றனர்.

இன்னும் சிலர் ஆசிரியர்களை நியமிக்கும் விஷயத்திலும் சில சலுகைகளை அவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றனர். பாடசாலைக்குரிய தளபாடங்களையோ பிள்ளைகளுக்கு வேண்டும் வசதிகளையோ கவனிப்பது மிகக் குறைவாயுமிருக்கின்றது.

ஆசிரியர்களைத் தங்கள் அடிமைகளைப் போலக் கருதிப் பலவித தொண்டுகளையும் செய்விக்கின்றனர். ஓர் பாடசாலையில் ஓர் முகாமைக்காரர் மத்தியானச் சாப்பாட்டு நேரத்திலும் ஆசிரியர்களைப் பாடசாலையிற் பிள்ளைகளை மேற்பார்வை செய்யும்படியும் காவல் புரியுமாறும் வற்புறுத்தி வருகின்றாராம். அவ்வூர் வாசிகள் மேற்படி முகாமைக்காரரின் எதேச்சாதிகாரக் கொள்கையைக் கண்டித்து கல்வி மந்திரியின் கவனத்திற்கு இவ்விஷயத்தைக் கொண்டுவரத் தீர்மானித்திருப்பதாக அறியக் கிடக்கின்றது.

மேலும் இப் பாடசாலை காலை 8-45 க்கு தொடங்கி மாலை 4-30 மணியளவில் மூடப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது. இந்த நேர அட்டவணைப்படி ஆசிரியர்கள் கல்விப்பகுதியில் கொடுக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க மேலதிக நேரத்திற்குக் கடமையாற்றும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றனர். இது பிள்ளைகளின் தேகாரோக்கியத்திற்கு கந்ததல்லவென்றும் பிள்ளைகள் 3-30 க்குப் பின் பாடசாலை அறைக்குள் அடைக்கப்பட்டுவைத்திருப்பது முறையல்லவென்றும் பெற்றார் முகாமைக்காரருக்கு ஓர் மனு அனுப்பியுள்ளதாகவும் தெரியப்படுகிறது.

ஆசிரியர்களுடைய வேலை எவ்வளவு கஷ்டமானதென்பதையும் அவர்களுக்குரிய ஆறுதல் நேரத்தைப் பறிப்பது அவர்களின் சுதந்திரத்தைப் பறிப்பதற்கு ஒப்பாகுமென்பதையும் இம்முகாமைக்காரர் உணரவில்லை.

இந்த இருபதாம் நூற்றாண்டிலே எங்கும் சுதந்திரத்திற்காகவும் தொழிலாளி முதலாளியிடம் தகுந்த சம்பளம், தகுந்த ஓய்வு தகுந்த வே[illegible]கள் முதலியன[illegible]கப் போராடும் இவ்வேளையிலே இவ்விதமான அசம்பாவித சம்பவங்கள் நிகழ்வது கவலைக்கிடமானதாகும்.

ஆசிரியர்கள் தங்கள் கடமைகளைக் கண்ணும் கருத்துமாய்ச் செய்யவேண்டும். ஆனல் கடமையைச் செய்யும் ஆசிரியர்கள் தங்கள் உரிமைகளை வேண்டி நிற்பதுமுறையேயாகும். ஆசிரியர்கள் தங்களுக்கு விசேட சலுகைகளை வேண்டுமென்று எதிர்பார்க்கவில்லை.

மயிரிழந்து கவரிமான் வாழாது — அதேபோல் மானம் ஒன்றேபெரிதென மதித்து அடிமைத்தனத்தை வெறுத்து அடக்கியாளும் கொள்கைகளை உதறி, சனநாயக முறையைப் பேணித் தமது சுதந்திரத்தைப் பிறர் பறிக்காது காப்பாற்றி வாழ்வதே ஆசிரியர்களின் குறிக்கோளாகும்.

ஆகவே நீதிநியாயமின்றி மனம்போனபோக்கின்படி பெற்றார், ஆசிரியர், பிள்ளைகள் முதலியோருடன் ஒத்துழைக்காது தங்கள் விருப்பப்படி எதேச்சாதிகாரமான முறையில் முகாமைக்காரர்களால் நடத்தப்படும் பாடசாலைகளை அரசினரின் நிர்வாகத்தின் கீழே கொண்டுவருவது சாலச் சிறந்ததாகும்.

ஆனல் இந்நாட்டிலுள்ள [illegible]

ஏற்று நடத்துமாறு நிர்ப்பந்திப்பது பிழையான கொள்கையாகும். அதனல் அநேக பாடசாலைகளின் தரம் குறைந்துபோகும். செவ்வனே நடாத்தப்படாத ஊழல்கள் மலிந்து பொலிந்திருக்கும் பாடசாலைகளை மாத்திரம் அரசினர் எடுத்து நடத்துவது நன்மை பயக்கக் கூடிய காரியமாகும்.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 5-7-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org